**எதிரி ஆஜர்.**

**அ.சா. 3, கிஷோர் குமார், த/பெ. சேகர், எம்.பி.எண்.1/2025, தேதி 06.05.2025 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் பி.பி.ஏ. படித்துள்ளேன். இறந்துபோனவர் என உறவினர் என்றால் இல்லை, எனது தெருவில் வசிப்பவர். நான் கோயம்புத்தூரில் வேலை செய்து வருகிறேன். நான் சம்பவத்தின்போது புலியூர் சிமெண்ட் பேக்டரியில் வேலை பார்த்து வந்தேன். எனது வீடும், நான் வேலை செய்து வந்த புலியூர் சிமெண்ட் பேக்டரியின் சம்பவ இடத்திற்கு கிழக்கே உள்ளது என்றால் சரிதான். நானும், ரமேசும் கும்கி ஹோட்டல் முன்பு நின்று கொண்டிருந்தோம். கும்கி ஹோட்டலுக்கும், தார் சாலைக்கும் இடையே மண் பகுதி உள்ளது என்றால் சரிதான். அந்த மண் பகுதியானது சுமார் 10 மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்தை நான் சத்தம் கேட்டுத்தான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். போலிசார் விசாரித்தபோது இரண்டு சக்கர வாகனம் லாரியின் எந்த பகுதியில் மோதியது என்று கூறவில்லை என்றால் சரிதான். இரண்டு சக்கர வாகனம் லாரியின் பின்புறம் எவ்வளவு தொலைவில் வந்தது என்று போலிசாரிடம் நான் சொல்லவில்லை என்றால் நான் சத்தம் கேட்டுதான் வந்து பார்த்தேன், அதனால் சொல்லவில்லை. சம்பவம் நடந்து எவ்வளவு நேரத்தில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் நான் காயம்பட்டவரை அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்கு சென்றுவிட்டதால் போலிசார் எப்போது வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. மருத்துவமனையில் காயம்பட்டவரை நான்தான் சேர்த்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த அன்று இரவு சுமார் 10.00 போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். அதன் பின்பு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. இறந்துபோனவர் எனது தெருவை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யா சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**